No:54:12 Price: Rs.10.00

Herald of Deliverance

விடுதலைத் தூதன்

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

DECEMBER 2010

பிள்ளையாகிய கிறிஸ்து

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை...

அன்பான தூதன் வாசகர்களுக்கு,

எனது உளங்கனிந்த கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.

இவ்வருடத்தின் பதினொரு மாதங்களையும் நம்மைத் தமது கண்ணின் கருவிழிபோல காத்துவந்த கர்த்தருக்குத் துதியும் கனமும் மகிமையும் உண்டாகட்டும். இம்மாதம் கிறிஸ்தவ உலகத்தின் மகிழ்ச்சி நிறைந்த மாதமாகும். கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடவிருக்கும் நாம், உலகத்தின் ஆடம்பரங்களில் மகிழ்ச்சியடையாது, கிறிஸ்து பிறப்பின் நோக்கத்தை மனதிற்கொண்டு அவரது திவ்ய சுபாவங்களையும், அவரது தாழ்மையையும் அணிந்தவர்களாய் நடந்து, அவரில் மகிழ்ந்து களிகூருவோமாக.

மேலும், இம்மாதம் வருடத்தின் கடைசி மாதமாயிருப்பதாலும், அடுத்து, நாம் புத்தாண்டுக்குள் பிரவேசிக்கும் நாட்கள் சமீபித்து வருவதாலும், நம்மை நாமே ஆராய்ந்து தேவனோடு புதிய உடன்படிக்கைகளைச் செய்து, கடந்துசெல்வோமாக.

''பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்'' (யோவான் 17:4) என்றுள்ள வாக்கிற்கிணங்க, ஊழியர்களும் விசுவாசிகளுமாகிய நாம் கர்த்தருக்கென்று நிறைவேற்றவேண்டிய ஊழியங்களைச் செய்து முடித்துள்ளோமா என்று ஆராய்வோமாக.

தெசலோனிக்கேய சபையார் மிகுந்த உபத்திரவத்திலேயும் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே கர்த்தரைப் பின்பற்றி, விசுவாசிகளுக்கு மாதிரிகளாக விளங்கி, இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆவலோடே எதிர்பார்த்துக்கொண்டிருந்ததுபோல, நாமும் காணப்படவேண்டும்.

நமது வாழ்வில் எதிர்பாரா சம்பவங்கள் நடக்கும்போது கர்த்தரிடம் முறுமுறுக்காது அவரது நடத்துதலுக்கு மனமுவந்து நம்மை அர்ப்பணிப்போம். **''அவர் தம்முடைய செயல்களை எல்லாவற்றையுங்குறித்துக் காரணம் சொல்லவில்லையென்று நீர் அவரோடே ஏன் வழக்காடுகிறீர்?''** (யோபு 33:13) என்றுள்ள வாக்கின்படி அவரிடம் நாம் கேள்விகேட்டு போராடாமல், ''உம்முடைய சித்தம் என் வாழ்வில் நிறைவேறட்டும்'' என்று கூறி பொறுமையாயிருக்கக் கற்றுக்கொள்ளுவோம்.

நம் வாழ்வில் ஏற்படும் இழப்புகளும், தோல்விகளும் கிறிஸ்தவ வாழ்வின் ஜெயத்திற்கு அடித்தளமாக அமையும். அதுவே, வெற்றியின் இரகசியமுமாகும். எனவே, கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடவிருக்கும் நாம் கிறிஸ்துவின் பொறுமையை கடைப்பிடிப்போமாக.

கர்த்தர்தாமே அதற்கேற்ற கிருபைகளை நமக்குத் தந்தருளுவாராக.

அன்புள்ள

R. K. Sam

பிள்ளையாகிய கிறிஸ்து

போதகர் எம்.கே.சாம் சுந்தரம்

டிசம்பர் மாதம் கிறிஸ்தவ உலகிற்கு மகிழ்ச்சியைத் தரும் மாதம். கிறிஸ்துமஸ் நாள் வருவதற்கு முன்னரே, உலகின் மேலை நாட்டவரும் கீழை நாட்டவரும் புதிய புதிய கொண்டாட்டங்களைக் கொண்டாடி மகிழ்வதைத் தொலைக்காட்சிவாயிலாகவும், செய்தித்தாள்களின்வாயிலாகவும் கண்டு, அறிந்துகொள்ளலாம். பெரும்பாலான கிறிஸ்தவர்கள், கிறிஸ்து இவ்வுலகில் அவதரித்ததின் நோக்கத்தை உணராது, உலக ஆடம்பரங்களுக்கு முதலிடம் கொடுத்து மகிழ்வதுதான் இயல்பாயுள்ளது. இது தவறாயினும், தவிர்க்கமுடியாததொன்றாகவும் இந்நாட்களில் காணப்படுகின்றது.

இயேசு கிறிஸ்துவைப் பாலகன் என்றும், குமாரன் என்றும் ஏசாயா தீர்க்கதரிசி குறிப்பிட்டிருக்கிறதை வேதத்தில் காணலாம். அவரை, "பிள்ளையாகிய கிறிஸ்து" என்றுள்ள தலைப்பில் இங்குச் செய்தியைக் காணப் போகிறோம். இச்செய்தி முற்றும் தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது.

"அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்" (லூக்கா 2:6,7).

இவ்வசனத்தில், *'பிள்ளை'* என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். இதுதவிர, லூக்கா 2 ஆம் அதிகாரம் முழுவதிலும் ஏழு இடங்களில், 'பிள்ளை' என்ற சொல்லைக் காணமுடியும். பொதுவாக, பாலகன், குழந்தை என்றுள்ள சொற்களுக்கும், 'பிள்ளை' என்றுள்ள சொல்லிற்குமிடையே அதிக வேறுபாடு இல்லாததுபோன்று நமக்குத் தோன்றலாம். ஆயின், இச்சுவிசேஷத்தை எழுதிய லூக்கா, ஆவிக்குரிய கண்ணோட்டத்தோடு இச்சொல்லைத் தெரிந்தெடுத்துப் பயன்படுத்தியுள்ளது பாராட்டத்தக்கது.

லூக்கா 2 ஆம் அதிகாரம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ள, 'பிள்ளை' என்ற வார்த்தையில் ஏழு குறிப்புகள் அடங்கியுள்ளன. அவை முறையே, "வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பிள்ளை", "தாழ்மையான பிள்ளை", "பாராட்டப்பட்ட பிள்ளை", "பிரித்தெடுக்கப்பட்ட பிள்ளை", "ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளை", "அபிஷேகிக்கப்பட்ட பிள்ளை", "தெய்வீக பிள்ளை" என்பனவாகும். வேதம் மிக அற்புதமான ஒரு புத்தகம். இதனைப் படிக்கப் படிக்க, தியானிக்க தியானிக்க, தெவிட்டாத அமுதமாகவும், தேனிலும் இனிமையான தொன்றாகவும் காணப்படுகின்றது.

அவர் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பிள்ளை

"பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள், இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்" (லூக்கா 2:12).

இந்தப் பிள்ளையை, "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பிள்ளை" என்றும், "வாக்குத் தத்தமாய் முன்னறிவிக்கப்பட்ட பிள்ளை" என்றும் கூறலாம்.

உலகம் தோன்றினதுமுதல் இன்றுவரை அதாவது, ஆறாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக்குறித்து

வேதாகமம் கூறியுள்ளது (ஆதியாகமம் 3:15). ஏசாயா தீர்க்கதரிசி கிறிஸ்து பிறப்பதற்கு 800 ஆண்டுகட்குமுன், *"இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்"* (ஏசாயா 7:14) என்றார். அதுமட்டுமன்றி, *"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்"* (ஏசாயா 9:6) என்றார். இரவு நேரத்தில் தங்களுடைய மந்தையைக் காத்துக்கொண்டிருந்த மேய்ப்பர் களிடம் தேவதூதன் தோன்றி, *"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக் கிறார்"* (லூக்கா 2:11) என்றான்.

இவ்வாக்குகள் அனைத்தும் இயேசு கிறிஸ்து ஒரு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பிள்ளை என்பதை நிரூபிக்கின்றன.

வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பிள்ளையாகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் மூன்று சிறப்பு அம்சங்கள் காணப்படுகின்றன. அவை: அவர் ஒரு பரிசுத்த பிள்ளை; அவர் ஓர் அற்புத பிள்ளை; அவர் ஒரு தனித்தன்மை வாய்ந்த பிள்ளை ஆவார்.

இயேசு கிறிஸ்து ஒரு கன்னிகையின் கர்ப்பத்தில் உற்பத்தியானது அவர் பரிசுத்த பிள்ளை என்பதை உறுதிப்படுத்துகின்றது. லூக்கா 1:26-31 வரையுள்ள தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கவும். தேவதூதன் மரியாளை நோக்கி, *"இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக"* என்று கூறினவுடன், அவள் மிகுந்த அதிர்ச்சியுள்ளவளாக, *"இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்"* (லூக்கா 1:34).

யூதகுல வழக்கத்தின்படி, கன்னி மரியாள் சிறுவயதிலேயே யோசேப்பிற்கென்று நிச்சயிக்கப்பட்ட பெண்ணாக வாழ்ந்துவந்தாள். அவள் தனது பரிசுத்த விவாகத்துக்கு முன்னரே, *"கர்ப்பவதியாவாள்"* என்பதைத் தேவதூதன் முன்னறிவித்தான். கிறிஸ்து திடீரென பிறந்தவரல்ல. அவரது பிறப்பு, வேதாகமத்தின் முதற்புத்தகமான ஆதியாகமத்திலுங்கூட காணப்படுகின்றது.

"உனக்கு ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்" (ஆதி.3:15).

உலகில் பிறந்துள்ள அனைவரும், ஒரு ஸ்திரீயின் வித்து என்று கூறமுடியாது. யோசேப்பும் மரியாளும் பரிசுத்த விவாகத்தில் இணையும் முன்னரே, அவர்கள் இருவரும் கூடிவாழும் முன்பே, ஒரு கன்னிகையின் கர்ப்பத்தில் பரிசுத்த ஆவியானவரின் நிழலாட்டத்தினால் இயேசு கிறிஸ்து அவதரித்தபடியால், அவர் ஒரு பரிசுத்த பிள்ளை என்பதை நிரூபிக்கலாம். அவர் கன்னிகையான ஒரு ஸ்திரீயின் வித்துமட்டுமே. மனிதனது சித்தத்தின்படி அவர் அவதரிக்கவில்லை.

அடுத்து, அவர் ஒரு அற்புதப் பிள்ளை. எவ்வாறு? விஞ்ஞான முறைப்படியும், இயற்கையின் முறைப்படியும் அவர் தோன்றவில்லை. மனுக்குல சரித்திரத்தில் ஒரு கன்னிகை கர்ப்பவதியாகமுடியுமா? இவ்வாறு நிகழ்ந்ததேயில்லை. இது இயற்கைக்கு முரண்பட்டதோர் அற்புதமன்றோ? அதனால் இவர் அற்புதப் பிள்ளைதான். இவரை, "அற்புதப் பிள்ளை" என்று அழைப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதுமாகும்.

மட்டுமன்றி, அவரது பிறப்பு ஒரு தனித்தன்மை வாய்ந்தது. உலகில் அவதாரங்கள் என்று அழைக்கப்படுபவர்களுடைய வாழ்க்கையையும், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையையும் ஒப்பிட்டு நோக்கும்போது, அவர் தனித்தன்மை வாய்ந்தவர் என்பதை நன்கு அறியலாம். மற்ற அவதாரங்களோடு இயேசுவை ஒப்பிடுவதையும், அவர்களது படங்களுக்கு அருகாமையில் இயேசுவின் படத்தை வைத்திருப்பதும் மனிதனது மூடத்தனத்தையே விளக்குகின்றது.

"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த

...ர்த்தை தேவனாயிருந்த. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்'' (யோவான் 1:1,2).

அந்த வார்த்தையானவர்தான் மாமிசத்திலே வெளிப்பட்டார். வார்த்தையாயிருந்து, மாமிசத்திலே வெளிப்பட்ட இந்த இயேசுவைப் புரிந்துகொள்ள, அறிந்துகொள்ள, ஏற்றுக்கொள்ள அநேகர் ஆயத்தமாக இல்லை. அவரை அறிந்து, ஏற்றுக்கொண்டுள்ள நாமோ பாக்கியவான்கள். அது நமக்குக் கிடைத்த பெரும் சிலாக்கியம்.

வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பிள்ளையாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்போம்; மகிழ்ச்சியடைவோம். அவரே நமது கிறிஸ்துமஸ் பரிசாக அமைவாராக.

அவர் தாழ்மையான பிள்ளை

"தீவிரமாய் வந்து, மரியாளையும் யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற ***பிள்ளையையும்*** *கண்டார்கள்"* (லூக்கா 2:16).

தேவதூதனால் முன்னுரைக்கப்பட்ட பிள்ளையாகிய இயேசுவைக் காண எதிர்பார்ப்போடு சென்ற மேய்ப்பர்கள் இப்பொழுதோ, அப்பிள்ளையைக் கண்கூடாகக் கண்டனர். அவர் ஒரு தாழ்மையான பிள்ளையாகக் காணப்பட்டார். எவ்வாறு?

அவர் துணிகளால் சுற்றப்பட்டு மாட்டுத்தொழுவத்தில் கிடத்தி வைக்கப்பட்டிருந்தார். அப்போதிருந்த குளிரைப் பிள்ளை தாங்குவதற்கும், போர்த்துக் கொள்வதற்குமுரிய ஒரு முழுத்துணிகூட மரியாளிடம் இல்லைபோலும்!

முன்னணை என்பது ஆடுமாடுகள் உணவு உண்பதற்காகத் தொட்டிகள் வைக்கப்பட்டிருக்குமிடமாகும். அது மாட்டுக் கொட்டகைக்கு உள்ளே அமைக்கப்பட்டிருந்ததோ, அன்றி வெளியே அமைக்கப்பட்டிருந்ததோ அறியோம். மரியாளும், பிள்ளையும், யோசேப்பும் தங்குவதற்குங்கூட சத்திரத்தில் இடமில்லாதிருந்தது என்று வேதம் கூறுகிறது. பொதுவாக, சத்திரம் என்பது ஏழைகள் தங்குமிடம். ஒருவேளை அவர்கள் திறந்த வெளியில்கூட தங்கியிருந்திருக்கலாம்.

கிழக்குத் தேசத்திலிருந்து வந்த சாஸ்திரிகள் பிள்ளையைப் பார்க்க ஏன் ஏரோதின் அரமனைக்குச் சென்றனர்? யூதருக்கு இராஜா என்றழைக்கப்படுபவர் ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறந்திருக்கமுடியுமா? என்று அவர்கள் எண்ணினதால்மட்டுமே. அவர்களது மூளை பிள்ளைகுறித்து அறிவதற்கு எட்டாததாயிருந்தது. அவர் அரமனையில் பிறந்திருப்பார் என்றெண்ணித்தான் ஏரோது இராஜாவிடம் சென்றிருப்பர்.

இயேசுவாகிய பிள்ளை, தாழ்மையின் உருவெடுத்த அந்தப் பிள்ளை, பல அசௌகரியங்களோடு அந்தத் தொழுவத்தில் கிடத்தப்பட்டிருந்தது.

அண்டசராசரங்களை உண்டாக்கினவர் இப்பூமியில் அவதரித்தபோது, தாழ்மையின் உருவெடுத்தார். எதற்காக? நீங்களும் நானும் தாழ்மையுள்ளவர்களாய் வாழவேண்டும் என்பதற்காகவே. ஓர் ஏழைக் கோலமெடுத்து, எல்லா அசௌகரியங்களையும் அவர் தாழ்மையுடன் கடந்துசென்றார். இன்று குடிசைப்பகுதியில் வாழ்பவர்களுங்கூட தங்கள் பிள்ளைகளுக்கு அழகான உடை உடுத்தி, ஆலயத்துக்குக் கொண்டு வருகிறதைக் காண்கிறோம். இயேசுவாகிய பிள்ளையோ வசதியற்ற நிலையில் முன்னணையில் கிடத்தப்பட்டிருந்தார்.

அன்பானவர்களே! அகிலமும் படைத்த ஆண்டவர் இந்தத் தாழ்மைக்கோலம் பூண்டு பிறந்திருக்கும்போது, நீங்கள் ஏன் உங்களைத் தாழ்த்தக்கூடாது? வசதிக்குறைவுகளைச் சகிப்பதற்கு ஏன் முறுமுறுக்கிறீர்கள்? வசதிக் குறைவுகளைச் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள். பிள்ளையாகிய இயேசுவின் தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்.

அவர் பாராட்டப்பட்ட பிள்ளை

"... அந்தப் பிள்ளையைக்குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம்பண்ணினார்கள்"

"மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப் பட்டதின்படியே கேட்டு கண்ட எல்லாவற்றிற் காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக் கொண்டு திரும்பிப்போனார்கள்" (லூக்கா 2:17,20).

இங்குக் காணும் வசனத்திலும், *'பிள்ளை'* என்று கூறப்பட்டுள்ளதைக் கண்ணோக்கவும். *'பிரசித்தம் பண்ணினார்கள்', 'தேவனை மகிமைப்படுத்தி, துதித்தார்கள்'* என்று இங்குக் கூறப்பட்டிருப்பதால் அவரை, 'பாராட்டப்பட்ட பிள்ளை' என்று அழைப்பது மிகவும் பொருத்தமானது.

லூக்கா 2:9-14 வரையிலுள்ள வசனங்களை வாசிப்போமாயின், இந்தப் பிள்ளையைக்குறித்த சிறப்புத்தன்மைகளை நன்கு அறியமுடியும். "அவர் முன்னணையில் கிடத்தப்பட்டிருப்பவர்", "கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர்", "தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறவர்" என்றெல்லாம் தேவதூதன் மேய்ப்பர்களிடம் கூறினான்.

மனுக்குலத்தை இரட்சிக்கும் வல்லமையுடையவராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் பிறந்திருக்கிறார் என்ற நற்செய்தியைக் கேட்டவுடன் மேய்ப்பர்களுக்கு ஒருபுறம் பயமும், மறுபுறம் மகிழ்ச்சியும் உண்டாயிற்று. மேலும், பிள்ளையின் மேன்மையான, ஆச்சரியமான அநுபவங்களைக் கேட்ட மேய்ப்பர்களால் அமைதியாய் இருக்கமுடிய வில்லை. இந்த நற்செய்தியை மனுக் குலத்துக்குப் பிரசித்தம்பண்ணினார்கள். தேவனை மகிமைப்படுத்தினார்கள். அந்தப் பிள்ளையைக் குறித்து மேன்மை பாராட்டினார்கள்.

அன்பானவர்களே! "நான் 10 ஆண்டுக் கால விசுவாசி, 15 ஆண்டுகளாக இயேசுவைத் தொழுதுவருகிறேன்" என்று எண்ணி, ஆலய வளாகத்திற்குள் வந்து, கைதட்டி கரகோ[ஷத்]துடன் இயேசுவைக்குறித்து மேன்[மை] பாராட்டுகிறீர்களா? அன்றி, தனிப்ப[ட்ட] முறையில் இயேசு பிறந்ததின் நோக்கத்[தை] அவரது இரட்சிப்பின் சுவிசேஷத்தை மற்[ற]வர்களுக்கு அறிவித்து, அவரைக்குறித்து மேன்[மை] பாராட்டுகிறீர்களா? ஆராயவும்.

மேய்ப்பர்கள் இயேசுவைப் பாரா[ட்டி] பிரசித்தம்பண்ணினதுபோல, விசுவாசிகளா[கிய] நீங்களும் இந்நாட்களில் மனுக்குலத்து[க்கு] இயேசுவைக்குறித்துப் பறைசாற்றுங்கள். இது[வே] "கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்" என்[று] அறியுங்கள்.

அவர் பிரித்தெடுக்கப்பட்ட பிள்ளை

"பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்[ண] வேண்டிய எட்டாம் நாளிலே, அ[து] கர்ப்பத்திலே உற்பவிக்கிறதற்குமுன்[னே] தேவதூதனால் சொல்லப்பட்டபடியே, அ[தற்கு] இயேசு என்று பேரிட்டார்கள்" (லூக்கா 2:2[1]).

'பிள்ளை' என்ற சொல்லை இங்[கு] காண்கிறோம். தேவன் தம்முடைய தூதனை யோசேப்பிடம் அனுப்பி, *"உன் மனைவியா[கிய] மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக"* (மத்தே[யு] 1:20,21) என்று, அவர் பிறப்பதற்குமுன்[னே] அவரது பெயரைக் குறிப்பிட்டுச் சென்றா[ன்].

"விருத்தசேதனமில்லாத மாம்சமு[ள்ள] அந்நிய புத்திரரை" (எசேக்கியேல் 44:7) என்[று] வேதத்தில் காண்கிறோம். ஆம், விருத்தசே[தனம்] பண்ணப்படாத ஆண்மக்கள் அனைவ[ரும்] அந்நியர் எனப்படுவர். யூதகுல ஆண்ம[க்கள்] யாவரும் தாங்கள் பிறந்த எட்டாம் நா[ளில்] விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும் [என்று] தேவன் கட்டளையிட்டிருந்தார். இதுகுறி[த்து] ஆதியாகமம் 17 ஆம் அதிகாரத்தில் காண[லாம்]. மோசேயின் காலத்தில் நியாயப்பிரமாணத்[தின்] படி இது தேவனுடைய கட்டளை[யாக] உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மட்டும[ல்ல], விருத்தசேதனம் பண்ணப்படாதவன் ப[...]

ண்டிகையிலே பங்கேற்கவுங்கூடாது என்ற நியதியையும் தேவன் கூறியிருந்தார்.

தேவனுடைய நியமத்தின்படி, இயேசு கிறிஸ்து ஒரு பிரித்தெடுக்கப்பட்ட பிள்ளை ஆவார். எவ்வாறு? எட்டாம் நாளில் விருத்த சேதனம் பண்ணப்பட்டதால். லூக்கா 2 ஆம் அதிகாரம் 21,22,23 வசனங்களை ஆழ்ந்து வாசிக்கவும். இவ்வசனங்களில், "*தேவதூதனால் சொல்லப்பட்டபடியே*", "*மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே*" என்றுள்ள வாக்குகள் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். இவ்வாக்குகள் அவர் ஒரு "பிரித்தெடுக்கப்பட்ட பிள்ளை" என்பதை உறுதிப்படுத்துகின்றன.

லூக்கா 2:23 இல் காணும், "*அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும்*" என்றுள்ள தமிழ்ச்சொல், ஆங்கில வேதாகமத்தில், "*அவரைத் தேவனுக்குப் பரிசாகக் கொடுக்கவும்*" (லூக்கா 2:22) என்று சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. ஆம், இயேசு கிறிஸ்து நமக்காகக் கொடுக்கப்பட்ட தேவனுடைய பரிசுப் பொருளாவார்.

அன்பானவர்களே! நீங்களும் நானும் இவ்வுலகில் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவரது அபிஷேகத்தின்மூலமாகவும் பிரித்தெடுக்கப் பட்டவர்கள். உலகில் வாழும் எல்லா மனிதரும் இயேசுவின் இரத்தத்தால் கழுவப் பட்டவர்கள் அல்லர். நாமோ வேத வாக்கின்படி பிரித்தெடுக்கப்பட்டவர்கள். ஆனால், நமது வாழ்க்கை ஒரு பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கையாக அமைந்துள்ளதா என்பதை, நாம் ஆராய்ந்தறியவேண்டும்.

நீங்கள் ஒரு விசுவாசியாக, பிரித்தெடுக்கப் பட்ட பிள்ளையாக வாழுகிறீர்களா? கர்த்தருக்கென்று நீங்கள் கொடுக்கக்கூடிய சிறந்த பரிசு எது? தேவாலயத்திற்கு இயேசு கிறிஸ்து கொண்டுவரப்பட்டபோது, அவரைத் தேவனுக்கு ஒரு பரிசுப்பொருளாக அளித்தனர். அவரது பெற்றோர். தேவாலயத்தில் அவரைப் பிரதிஷ்டைபண்ணினார்கள் என்றோ, அல்லது பெயர் சூட்டினார்கள் என்றோ வேதம் கூறவில்லை.

பிரியமானவர்களே! நீங்கள் இயேசுவுக்கு எதைச் சிறந்த பரிசாகக் கொடுக்கப் போகிறீர்கள்? உங்களுடைய இதயத்துடிப்பு எது? உங்களது கனவு, நினைவெல்லாம் எது? இயேசுவுக்கு உங்களையே பரிசாக அர்ப்பணிப்பதே கிறிஸ்துமஸ் நாளின் சிறந்த பரிசாகும். இன்று உங்களை முற்றும் இயேசுவுக்கு அர்ப்பணித்து, பிரித்தெடுக்கப் பட்டவர்களாக வாழுவீர்களாக.

அவர் ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளை

"*அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டு வருகையில்*" (லூக்கா 2:27),

'*பிள்ளை*' என்று கூறப்பட்டுள்ளதை இங்கும் கவனிக்க. நியாயப்பிரமாணத்தின் முறைமையை நிறைவேற்றும்படி ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்ட இயேசுவாகிய பிள்ளையை, சிமியோன் தன் கைகளில் ஏந்தினான் என்று வேதம் கூறுகின்றது. அப்பிள்ளையைச் சிமியோன் தன் கைகளில் ஏந்தியது, அவன் பெற்ற பாக்கியமும் சிலாக்கியமும் ஆகும்.

தன் கரங்களில் அப்பிள்ளையை ஏந்திய சிமியோன், "*ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத் தோடே போகவிடுகிறீர்; புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்*" (லூக்கா 2:29-32).

சிமியோன் ஏன் இவ்வாறு கூறினான்? அவன் அப்பிள்ளையின்மேல் மிகவும் அன்பு கூர்ந்தபடியினால்தான். மனுக்குலம் அனைவ ராலும் அவர் அன்புகூரப்பட்ட பிள்ளை.

அவர் 'ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளை' என அழைக்கப்படக் காரணம் என்ன? அவர் சமாதானத்தை உண்டுபண்ணும் பிள்ளை, மனுக்குலத்திற்கு இரட்சணியத்தை அருளும் பிள்ளை, புறஜாதிகளிடம் பிரகாசிக்கின்ற பிள்ளை, மக்கள் அனைவராலும் அன்பு கூரப்படும் பிள்ளை. எனவே, அப்பிள்ளையை 'ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளை' என்று அழைப்பது சாலவும் பொருந்தும்.

இந்தக் கிறிஸ்துமஸ் நாட்களில், உலக ஆடம்பரங்களிலல்ல; இயேசுவின்மீது அன்பு கூர்ந்து, ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளையாகிய இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு மகிழ்வதுதான் நமக்குப் பிரதானமாய்க் காணப்பட வேண்டும். உணவு, உடை, ஆடல், பாடல் அனைத்தையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் வாழ்வதே சாலச் சிறந்தது.

அபிஷேகிக்கப்பட்ட பிள்ளை

"பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது" (லூக்கா 2:40).

'பிள்ளை' என்ற வார்த்தையை இங்கும் காண்கிறோம். இந்தப் பிள்ளை என்றும் பிள்ளையாகவே காணப்படவில்லை. பிள்ளை என்றென்றும் பிள்ளையாகவே காணப்பட்டால், பெற்றோரும் மற்றோரும் மகிழ்ச்சி அடைவார்களோ? ஒரு பிள்ளை பத்து வருடங்களாகியும் வளராமல், பேசாமல், நடவாமல், அப்படியே கிடக்குமானால், எவரும் அதனை விரும்ப மாட்டார். அதுகுறித்துத் துக்கந்தான் கொள்வர்.

இயேசுவாகிய பிள்ளையோ வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டார், ஞானத்தினால் நிறைந்து காணப்பட்டார். இப்பிள்ளை மற்ற பிள்ளைகளைப்போல் காணப்படவில்லை. இவர் ஒரு அபிஷேகிக்கப்பட்ட பிள்ளை ஆவார்.

ஒரு நாள் அந்திரேயா தன் சகோதரனான பேதுருவைச் சந்தித்து, *"மேசியாவைக் கண்டோம்"* என்று சொன்னான் (யோவான் 1:41). மே... என்றால் "கிறிஸ்து" என்று பொருள்... "கிறிஸ்து" என்ற சொல்லுக்கு, "அபிஷே... பண்ணப்பட்டவர்" என்பதும் பொருள். ... அவர் அபிஷேகம் பண்ணப் பட்டவர்...

"... தேவன் அவருக்குத் தமது ஆவி... அளவில்லாமல் கொடுத்திருக்கி... (யோவான் 3:34) என்று வேதம் கூறு... ஆம், இயேசுவாகிய பிள்ளை ஆவி... அபிஷேகத்தை நிறைவாகப் பெற்றிருந்...

அன்பானவர்களே! கிறிஸ்து... நாட்களைக் கொண்டாடவிருக்கும் ந... *"ஆண்டவரே! என்மீது ஆவியின் அபிஷேக... அளவில்லாமல் ஊற்றும்"* என்று கேட்போ...

இயேசு கிறிஸ்து ஜெப ஆலயத்தி... சென்றபோது, அவ்விடத்தில் கொடு... பட்டிருந்த தோற்சுருளை எடுத்து வாசி... ஜெப ஆலயத்திலிருந்த எல்லாரு... கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்த...

"கர்த்தருடைய ஆவியானவர் ... மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷ... பிரசங்கிக்கும்படி என்னை அபிஷே... பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்... குணமாக்கவும், சிறைப்பட்டவர்க... விடுதலையையும், குருடருக்குப் பார்வை... பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவ... விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநு... வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என... அனுப்பினார்..." (லூக்கா 4:18,19).

"கர்த்தருடைய ஆவியானவர் ... மேலிருக்கிறார்", "என்னை அபிஷே... பண்ணினார்" என்றுள்ள வாக்கியங்கள், ... அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்... நிரூபிக்கின்றன.

இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெ... போது, பரிசுத்த ஆவியானவர் புறாவைப்... அவர்மீது வந்திறங்கினார். அவர் ந... நாட்கள் உபவாசித்து முடித்தபோ... சோதனைக்காரன் அவரைச் சோதித்...

அவர் எல்லாவற்றிலும் வெற்றிகொண்டார். எவ்வாறு? அவர் பெற்றிருந்த அபிஷேகத்தினால் மட்டுமே.

பிரியமானவர்களே! உங்களுக்கு, மாமிச இச்சைகளின்மீதும், உலகத்தின்மீதும், பிசாசின் சோதனைகளின்மீதும் வெற்றி வேண்டுமா? நீங்கள் இயேசுவைப்போல அபிஷேகிக்கப் பட்டவர்களாகக் காணப்படுங்கள். சோதனைகளை வென்று ஜெய ஜீவிகளாய்க் காணப்பட, "என்னை அளவில்லாமல் அபிஷேகியும்" என்று இந்நாட்களில் தேவனை நோக்கி ஜெபியுங்கள்.

அவர் தெய்வீக பிள்ளை

"பண்டிகைநாட்கள் முடிந்து, திரும்பி வருகிறபோது, பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்துவிட்டார்; இது அவருடைய தாயாருக்கும் யோசேப்புக்கும் தெரியாதிருந்தது" (லூக்கா 2:43).

இங்கு, *'பிள்ளையாகிய'* இயேசு தேவாலயத்தில் தங்கிவிட்டார் என்று வாசிக்கிறோம். ஆம், அவர் உலகத்தின் பிள்ளையல்ல. தெய்வீக பிள்ளை.

பண்டிகை முறைமையின்படி இயேசு கிறிஸ்து தம் பெற்றோருடன் எருசலேம் தேவாலயத்திற்குச் சென்றார். பெற்றோர் ஆலயத்தைவிட்டுத் திரும்பும்வேளையில் அவர் அவர்களுடன் வீடு திரும்பவில்லை. ஆலயத்திலேயே தங்கிவிட்டார். இதனை அவரது பெற்றோர் அறியவில்லை.

"பிரயாணக்காரரின் கூட்டத்திலே அவர் இருப்பாரென்று அவர்கள் நினைத்து, ஒரு நாள் பிரயாணம் வந்து, உறவின் முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடினார்கள். காணாததினாலே அவரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். மூன்று நாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவிலே உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள்... அப்பொழுது அவருடைய தாயார் அவரை நோக்கி: மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள்" (லூக்கா 2:44,46,48).

அதற்கு இயேசு கூறிய பதில் என்ன? *"நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டிய தென்று அறியீர்களா என்றார்"* (லூக்கா 2:49).

லூக்கா 2:49 இல் காணும், பிதா என்ற ஆங்கில வேதாகமச் சொல்லின் 'F' பெரிய எழுத்தில் (capital letter) அச்சிடப்பட்டிருக்கிறது. லூக்கா 2:48 இல், "உன் தகப்பன்" என்று மரியாள் கூறினது சிறிய எழுத்தில் அச்சிடப் பட்டுள்ளது. இதன் பொருள் என்ன? இயேசு கிறிஸ்து உலகத்தில் வாழ்ந்த தகப்பனுக்குப் பிறந்த பிள்ளை அல்ல என்பதாகும்.

இது ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிற தல்லவா? அவர் பரம பிதாவைத்தான் தம்முடைய, "பிதா" என்று தம் சிறுவயதிலேயே தெளிவுபடுத்தினார். ஆம், அவர் உலகத் தகப்பனுக்குப் பிறந்தவர் அல்லர். அவர் ஒரு தெய்வீக பிள்ளையே.

பிரியமானவர்களே! நீங்கள் உலகத்தில் வேலையில் ஈடுபட்டிருக்கலாம். ஆயின், அது ஒரு பகுதிநேர வேலைமட்டுமே. பரம பிதாவுக்கு நீங்கள் செய்யும் வேலைதான் முழுநேர வேலை. நீங்கள் இப்போது பகுதிநேர வேலை செய்கிறீர்களா? அன்றி, பரம பிதாவுக்கு முழுநேரமாகப் பணியாற்றி வருகிறீர்களா? ஆராயவும்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடி மகிழும் இந்நாட்களில், தெய்வீக பிள்ளையாகிய அவரை நோக்கி, "இயேசுவே! உமக்கு முழுவதுமாகத் தொண்டுசெய்ய என்னை ஆயத்தப்படுத்தும்" என்று ஜெபிப் பீர்களாக. கர்த்தர்தாமே உங்களை ஆயத்தப் படுத்துவாராக.

The Son given to us

Pastor M.K. Sam Sundaram

This is a Christmas message, and naturally, it is about Jesus Christ. The birth of Jesus is not only unique, it is also undeniable because there are historical proofs of His birth. Though the birth of Jesus is a certainty, the date of His birth is not. Thank God for it. If people knew the date, they would worship the date (which would be idolatry), and not the Son who alone is worthy of worship. God has kept it a secret on purpose, so that people will give more importance to the Son, and know the purpose of His birth.

I wish to give God's message on a very familiar verse which most of us know by heart. Here it is: *"For unto us a child is born, unto us a son is given: and the government shall be upon his shoulder: and his name shall be called Wonderful, Counsellor, The mighty God, The everlasting Father, The Prince of Peace"* (Isaiah 9:6). You may wonder what new message can be given on an old, oftquoted verse. Let me explain.

The Word of God is ever fresh like a fountain or a well from which new springs of water come up as we draw more and more water from it. Even if you draw water from the same well day after day, you do not get the same old water, but it is ever fresh. In the same way, as you delve deep into the Word of God, each time you get a new message. It is a message of blessing, and it builds up your character and life.

The part of the verse chosen for today's message in Is.9:6 is: *"Unto us a son is given."* The Son of God was born in this world as a baby. God gave His Son as a gift to us, and that is the reason why we who have received this precious gift from God, give gifts to our relatives and friends during Christmas. To the Son who is given to us as a gift, the wise men who went to Bethlehem to see Him, offered precious gifts like gold, myrrh and frankincense.

In this portion of the verse chosen for our meditation today the word 'us' attracted my attention. Usually, when a son is born in a family, he is said to have been born to a particular father and mother, and therefore he belongs only to them. No one else can claim him as their son. But, here we see that the Son is given to ***us***, which means, everyone in the whole world can claim Him as their own.

You may say that Jesus is the son of Joseph and Mary. That is what people of Jesus' time said when they saw the miracles He did. *"Is not this the carpenter, the son of Mary...?"* they asked (Mark 6:3). Wondering at the gracious words which proceeded out of His mouth, they said, *"Is not this Joseph's son* (Luke 4:22)? They referred to Jesus as the son of Mary and Joseph be-

cause they did not have the revelation that He is the Son given to us. Jesus is not the son of Joseph nor of Mary. God used Mary only as a vessel to send Him into the world.

People may say that Jesus is the son of Joseph and Mary, but that does not make Him exclusively theirs because Isaiah 9:6 says, with reference to Jesus, that a son is given to ***us.*** We can therefore collectively claim Him as ours. He belongs to everyone in the whole universe.

Once, when Jesus was on the earth, He asked His disciples, *"Who do people say that the Son of Man is? And they answered, some say John the Baptist; others say Elijah; and others Jeremiah or one of the prophets. He said to them, But who do you* [yourselves] *say that I am? Simon Peter replied, You are the Christ, the Son of the living God"* (Matt.16:13-16-Amplified Bible). Immediately Jesus said to him that he was blessed because flesh and blood had not revealed it to him, but His Father who is in Heaven had given him the revelation (v.17). From this we learn that we need a revelation from God the Father to know that Jesus is a Son given to us—to every one on the face of the earth—and that He is not the son of Mary and Joseph as it is commonly believed He is.

The Son requires our love and adoration. We are called to love Him, draw near Him, and kiss Him as we see in Ps.2:12: *Kiss the Son, lest he be angry, and ye perish from the way, when his wrath is kindled but a little. Blessed are all they that put their trust in him."* (Psalm 2 verses 7-12 speak about Jesus, but verse 7 speaks not of His birth but of His resurrection). You are required to draw close to Him, for the Bible says, *"Draw near to God and He will draw near to you"* (James 4:8). If you accept Him as a baby today, He will be a Son to you tomorrow.

The birth of this Son is supernatural. He was born of a virgin who conceived Him by the Holy Spirit. The world will not accept this, and medical science cannot explain it. But the fact remains that He was born supernaturally, and that He is supernatural in every respect. If He was not, how could He be a Son to everyone?

Jesus is the express image of the Father (Heb.1:1-3), and that is the reason why He said that he who had seen Him had seen the Father. When He could create the entire universe, should it be possible for Him to be born of a virgin?

Jesus the Son can do many things for us, but I would like to discuss three things namely, the marvellous deliverance, the sweet fellowship and the divine image that He gives us if we know Him as the Son given to us. In each of the three I have chosen only verses with the words 'the Son' and not 'the Son of God'.

Marvellous Deliverance

"If the Son therefore shall make you free, ye shall be free indeed" (John 8:36).

A Son is given to us, and the Son is able to deliver us from every kind of sin which enslaves us. He is the One who can

deliver us from the sin which Satan makes us commit.

You may have confessed all your sins to Jesus and obtained forgiveness from Him, after which you obeyed the Lord in water baptism. You are now a believer. Yet, there is still one particular sin which has enslaved you. You keep committing it again and again. It may be alcoholism or smoking or even flying into a rage when provoked. However much you try, you are unable to be free from that one particular sin to which you are still a slave. But, let me assure you, believer, the Son is able to deliver you if you are sincere about coming out of it. Here is an incident which happened a few years ago:

A mother came to a pastor accompanied by her son who had the habit of constantly telling a lie, and asked him to pray for him. She told him she had tried beating him, telling him stories and counselling him, and yet he was not delivered. The pastor knew it was the devil who had made him a liar. He told the mother to lay her hands on her son and rebuke the evil spirit of lying in the name of Jesus of Nazareth. She did so, and the boy was immediately delivered. From this incident it is clear that it is the Son who delivers people from the clutches of the devil.

In another incident Jesus delivered a young man from his addiction. He was a slave to smoking and he wanted to be delivered from it. He tried hard, but he could not be free from it. One day, he read the words, *"I am crucified with Christ: nevertheless I live; yet not I, but Christ lives in me."* His eyes were opened, and with fear and reverence he said to the Lord, "Jesus, Your Word says You live in me. If so, when I smoke, it is You who are smoking. Lord, I have tried my best to give up smoking, but I can't. I don't want to smoke. Please help me." At once the Lord delivered him from the evil habit. We know from many other incidents that the Son sets people free. The very first Christmas gift mankind received from God is the Son who gives marvellous deliverence from sin.

Sweet Fellowship

"God is faithful, by whom ye were called unto the fellowship of his Son Jesus Christ our Lord" (I Cor.1:9).

The purpose of the Son being given to us is that we can have sweet fellowship with Him.

Jesus, who was with God in heaven, came down to earth, and was born as a baby. He grew up and lived among men. But now, He is no longer in the flesh, and yet it is possible for us to have fellowship with Him through the Holy Spirit. The devil may discourage you saying you can never have fellowship with Jesus the Son because you are sinful by nature. But, God is faithful to enable us to be in fellowship with the Son whom He has given to us. There are three things which help us to have sweet fellowship with the Son. They are: prayer, praising and the Holy Communion.

Mark 9:2 says that Jesus took with Him Peter, James and John to a high mountain, and transfigured before them. Here we see how the three disciples who formed the inner circle among the twelve were privi-

leged to be **with** Jesus, and have a beautiful time of fellowship with the Lord.

The same incident recorded in Luke 9:29 tells us that Jesus took the three disciples to the mountain to pray. It is through prayer that we can have fellowship with Jesus because prayer brings the presence of Jesus very close to us. Many a time Jesus had all the twelve disciples with Him, and needless to say, they enjoyed His presence as well as His preaching through parables, and were filled with wonder when He did many miracles. It was indeed a great privilege for all the twelve disciples to have the sweet fellowship of Jesus whose sweet nature—love, mercy, grace and compassion—made it sweeter still.

Now, the question is, how much of your time do you spend with the Son in prayer? Unfortunately, many believers are busy running here and there in the name of the ministry they are called to do. Besides being involved in the ministry, you should also spend time with Jesus in prayer. Personal prayer is as important as praying as a group.

Praising Jesus for the manifold blessings He has showered upon everyone of us is also important. Praise, like prayer, brings the presence of the Lord very close to the one who, being filled with gratitude, worships Him. Praise and worship should form part of every believer's life as it does of every service in the church.

The Holy Communion instituted by Jesus is also very important for this fellowship. The twelve disciples and many other disciples were with Jesus when He gave a discourse on His body and blood. Listening to it, some of them murmured saying, *"This is an hard saying. Who can hear it?"* and *"From that time many of his disciples went back, and walked no more with him"* (John 6: 60 and 66). Jesus asked His twelve disciples if they also would go away. Peter said, *"Lord, to whom shall we go? thou hast the words of eternal life"* (v.68).

We observe here how some of the disciples of Jesus who could not understand the value of the body and blood of Jesus Christ had no mind to be with Him, and backslid. Therefore, when we take part in the Holy Communion, we are with Jesus, who gives us not only His presence, but also eternal life.

The Divine Image

"For whom he did foreknow, he also did predestinate to be conformed to the image of his Son..." (Romans 8:29).

The will of the Father in giving us the Son is to make us conform to His divine image. This, I think, is the greatest gift for us. When Jesus the Son was on the earth, He reflected His Father's image. He set an example to His followers. We should also speak like Him, and be like Him in every way, and only then can we get His divine image. If the image of the Son is to be formed in you, you should accept His will, believe His Word, and live as He did.

Accepting His will is something very difficult for many Christians. If everything

goes off well, they are happy thinking that God's will is fulfilled in their lives. But, if things do not turn out the way they expect them to, they murmur and become very unhappy. If you read Romans 8:28, you will understand what accepting His will really means. It says, *"And we know that all things work together for good to them that love God, to them who are the called according to His purpose."* The words, 'all things' take into account both good and bad. When you lose something or when there are disappointments as well as worries and unpleasant situations in your life, how do you react? Do you take them as the will of God?

Let me give you an example from my own life. After I completed my B.Com. (Hons.) course successfully, I wished to take up a job in a bank. My father was in a high position, and he arranged with the manager of a bank for an interview for me. I went, and a test in 'addition' was given to me. I was aked to add five digits of fifteen items in ten minutes' time. Since I was very good at mathematics, I thought I could do it in five minutes. I was very confident that I would get through because my father prayed before sending me to the interview.

The manager gave me the test and told me to do it in twenty minutes. I did it, and took it to the manager. Since the manager was very friendly with my father, he told me that he would give me ten more minutes, and that I should do it correctly. I prayed and prayed, and I got another answer. I thought it must be correct and I took it to the manager. He looked at my face, and told me that he would give me ten more minutes to total the figures again. This time I prayed very hard and added the numbers. I got another answer and I was sure it was correct. The manager looked at me, and told me that eventhough I had learnt addition in the S.S.L.C., Intermediate and B.Com. (Hons.) courses, none of the answers I had come up with were correct, and that he did not know what he could do for me.

I returned home by bus with my eyes welling up with tears. As soon as I reached home, my anxious father asked me how I had fared in the test. I told him I had failed. Immediately he told me to go to the next room. His words sent a chill down my spine. I thought he was going to thrash me. To my great relief he said, "Unroll the mat. Let us kneel down and praise God for your failure." It is because of my failure that I stand before you today. God has been blessing me abundantly since then.

Whatever happens in your life, you are to praise Him, and this is how you reflect His image.

If you believe His Word and live as He did when He was in the flesh, you can conform to His image. In Romans 8:30 Apostle Paul writes, *"Moreover whom he did predestinate, them he also called: and whom he called, them he also justified: and whom he justified, them he also glorified."* The image of Jesus is already given to us. We have been predestinated, called, justified and glorified. The glory of His image belongs to us who are called and made righteous by the Son. All you need to do is believe the

Word of God which says the image of Jesus is given to you. If you believe it, you will live as Jesus did. You will obey Him as He obeyed His Father, and do His will.

This Christmas, know that a Son is given to set you free from Satan, sin and sickness. He will give you His presence and make you enjoy sweet fellowship with Him. Above all, He will help you to be moulded into the divine image of the Son. Glory to God!

ஊழியர் பகுதி

சாது சுந்தர் சிங்

தொடர்ச்சி

கைலாச மகரிஷி (1912)

துறவிகள் தங்களின் கடைசிக் காலத்தில் பரம நிஷ்டையாக கெபிக்குள் இருந்து தவம் கிடப்பர். திபெத்திற்குப் போகும்போதெல்லாம் இப்படிப்பட்ட குகைகளைப் பார்வையிட்டுக் கொண்டே செல்வார் சுந்தர். அப்படிச் செல்லும்போது அங்குள்ள துறவிகளுடன் பேசி, அவர்களுக்கு வசனத்தைப் போதிப்பது வழக்கம்.

இமயமலைத் தொடர்களில் கைலாசமென்னும் மலைத்தொடருமுண்டு. மனித நடமாட்டமில்லாத இப்பகுதியில் எப்பொழுதும் பனி மூடி இருக்கும். இங்கிருந்துதான் சிந்துமகாநதி உற்பத்தியாகிறது. இந்நதியின் கிளை நதியான சட்லெஜ் கைலாசிலிருந்துதான் புறப்படுகிறது. இது சமுத்திர மட்டத்திற்குமேல் 3,494 அடி உயரமான குன்றின் பிளப்பிலிருந்து புரண்டு வருகிறது. அத்தனை இயற்கை எழில் கொண்டது இது.

கைலாசத்தில் ஒரு குன்றின் உச்சியில் பாழடைந்துபோன ஒரு புத்த ஆலயம் இருக்கிறது. இத்தனை தூரமுள்ள இதனைப் பார்க்க எவரும் போனதில்லை. இந்தக் கோயிலுக்குச் சில மைல் தூரத்தில் 13,000 அடி உயரத்திலிருக்கும் ஒரு குகையில் கைலாச மகரிஷி என்பவர் தவம் செய்து கொண்டிருந்தார்.

1912 ஆம் வருடம் வேனிற்காலம் சுந்தர் சிங் இம்மலையிலுள்ள துறவிகளையும் தபசிகளையும் சந்திக்கப் புறப்பட்டார். கண்ணைக் கவரும் இயற்கை எழில்கொண்ட பிரதேசமது. நீரூற்றுகளும் அருவிகளும் பச்சைத் தாவரங்களும் படர்ந்து வளர்ந்த அவ்வழகைப் பார்த்துக்கொண்டே சாது நடந்தார்.

பசியின் கொடுமை, உடலின் களைப்பு இவைகளினால் தடுமாறிக் கீழே சறுக்கிக் கொண்டுபோய் விழுந்தார். புத்தி தெளிந்து விழித்துப்பார்த்தபோதோ, ஒரு பயங்கரமான, அதிர்ச்சியூட்டக்கூடிய காட்சியைக் கண்டார். சாது சறுக்கி விழுந்த குகையின் வாயிலில் தியானத்தில் ஆழ்ந்திருந்த ஒருவரைப் பார்த்தார். அவர்தான் கைலாச மகரிஷி என்று அழைக்கப்படுபவர்.

முதலில் ஏதோ ரோமம் அடர்ந்த மிருகமென்று நினைத்தார். நன்கு உற்றுப் பார்த்தபிறகு திடுக்கிட்டு கண்களை இறுக மூடிக்கொண்டார். கொஞ்சங் கொஞ்சமாய்ப் பயம் தெளியத் தெளிய கண்களை மெல்ல திறந்து பார்த்தபோதோ அவர் வெகுநாட்களாக தியானத்திலிருப்பதை உணர்ந்தார். தன் வாழ்நாளில் இதுவரை இப்படி ஒரு தபசியைக் காணாத சுந்தர் அவரைக் கண்டதில் அதிக மகிழ்ச்சிகொண்டார்.

தன்னுடைய நிஷ்டை கலைக்கப்பட்ட போது, கண் திறந்து பார்த்த ரிஷி, "நாம் முழங்காற்படியிட்டு ஜெபிப்போம்" என்றார்.

ஒரே ஆனந்த அதிர்ச்சி. எல்லையில்லா சந்தோஷத்தில் இவர் ஜெபிப்பதற்கு ஆயத்தமானார். இருவருமே ஜெபித்தனர். இப்படிப்பட்ட ஜெபத்தை இதுவரைக்கும் சுந்தர் கேட்டதில்லை. தன் ஜெபத்தை முடிக்கும் போது, "இயேசு கிறிஸ்துவின்மூலமாய்க் கேட்டருளும் பிதாவே" என்று முடித்தார். பிறகு மகரிஷி தன் பக்கத்திலிருந்த புதிய ஏற்பாட்டை எடுத்து மத்தேயு ஐந்தாம் அதிகாரத்திலுள்ள சில வசனங்களை வாசித்தார்.

மகரிஷி படித்த அந்தப் புதிய ஏற்பாடு கிரேக்க பாஷையில் எழுதியிருந்த நான்கு சுவிசேஷங்களடங்கிய ஒரு புத்தகமாக இருந்தது. இப்புத்தகச் சுருள், ஆதி சீடர்களில் சிரேஷ்டரென்று அழைக்கப்பட்ட சவரிராயர் (பிரான்சிஸ் சேவியர்) என்பவர் பயன்படுத்திய சுருளாகும்.

ரிஷி தன்னுடைய வாழ்க்கையைச் சொல்ல ஆரம்பித்தார். அவர் அலெக்ஸாண்டிரியாவில் ஒரு முகமதியக் குடும்பத்தில் பிறந்து, முகமது நபியின் சீடனாக வளர்ந்தவர். தனது முப்பதாவது வயதில் துறவறம் பூண்டு மடத்திற்குச் சென்றார். எனினும், மனதில் அமைதியில்லை. குர்ஆனும் முகமது சமயமும் அவருடைய மனதிற்கு அமைதியளிக்கவில்லை. அப்போது இந்தியாவிலிருந்து அலெக்ஸாண்டிரியாவிற்கு வசனத்தைப் பிரசங்கிக்க வந்த ஓர் ஊழியரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் கூறிய சத்தியங்களைக் கேட்டு, ஆண்டவரை ஏற்றுக் கொண்டார்.

பிறகு தனது மடத்தைவிட்டு வெளியேறி, தனது குருவைப்போலவே எங்கும் சுற்றித்திரிந்து ஊழியம் செய்யத் துவங்கி, பல ஆண்டுகள் தேவனுக்குப் பணிவிடையைச் செய்தார். தனது கடைசி நாட்களில், எதையும் செய்யமுடியாத வயதான நாட்களில், ஒரு கெபிக்குள் வாசம்பண்ணி நாட்களைக் கழிக்க முடிவுசெய்தார்.

மகரிஷி இமயமலைப் பிரதேசத்தில் காணப்படும் மூலிகை இலைகள், பழங்க... ஆகியவைகளை உண்டு, நாட்களை கழித்தார். பச்சையிலைகளின் வைத்தியத்தா... எத்தனைக் கடினமான பிணியையு... போக்கலாம் என்பது மகரிஷியின் அனுபவ...

இப்படி மகரிஷி தனது வாழ்க்கை... பற்றிச் சொல்லிக்கொண்டே இருக்கும்போ... பனியால் சாது சுந்தருக்கு உடம்பு குளிர்ந்து போனது. இதைக் கண்ட ரிஷி, ஒரு செடியி... சில இலைகளைப் பறித்துக்கொடுத்தா... அவற்றை உண்ட அடுத்த வினாடியே சுந்தரி... தேகம் அனலடைந்தது.

சாது சுந்தர்சிங் கைலாச மகரிஷியோடு பேசியதிலிருந்து பல காரியங்களைத் தெரிந்து கொண்டார். சாது சொன்ன பல காரியங்களி... பெரும்பாலானவைகள் இவரிடமிருந்து கற்று வந்தவையாகும். ரிஷி ஓர் அந்தரங்க கிறிஸ்தவ சந்நியாசக் கழகத்தைச் சேர்ந்தவர். இவர், தான் பெற்ற தரிசனங்களையெல்லாம் சுந்தரிடம் கூறினார். அவைகளையெல்லாம் எழுதினால் இன்னொரு வெளிப்படுத்தின விசேஷம்போல இருக்கும். இத்தரிசனங்களை மகரிஷி உருவகம் நிறைந்த நூதன மொழிநடையில் விளக்கினார். இதைச் சொல்லார்த்தமாய் எடுத்துக்கொண்டு பொருள்படுத்தினால் தவறாகிவிடும் என்று சாது கூறுகிறார்.

தனது பயணத்தின்போதெல்லாம் சாது அங்குச் செல்ல விரும்பினார். மூன்றுமுறை கைலாச மகரிஷியைச் சந்தித்திருக்கிறார்.

காவி உடையில் எங்கும் திரிந்த சுந்தர் ஆண்டவருக்காய்த் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் என்பது எத்திசைக்கும் தெரிய ஆரம்பித்தது. அவர் போதனைகள் மக்களை அதிகம் ஈர்த்தது. அவர் தன்னுடைய வார்த்தையிலும் செயலிலும் கவனமாயிருந்தார். அமைதியான குரலிலும் சாந்தமான முகத்தோடும் மக்களோடு பேசினார். கிறிஸ்தவ குணமும் சாட்சியும் நிறைந்த மகனாய் இவர் வாழ்ந்தார்.

(தொடரும்)

வேதபாடம்

உன்னதப்பாட்டு

பாடம் 25 (தொடர்ச்சி)
(உன்னதப்பாட்டு 7:1)

"உன் இடுப்பின் வடிவு விசித்திரத் தொழிற்காரரின் வேலையாகிய பூஷணம் போலிருக்கிறது" (உன்.7:1).

இந்த வசனம் ஆங்கில மொழியாக்கத்தில், *"The joints of thy thighs are like jewels"* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இடுப்பும் தொடையும் இணையும் மூட்டை இது குறிக்கின்றது. இது ஆண்டவருக்குச் சேவை செய்வதற்குரிய பெலத்தை இது விளக்குகிறது. இடுப்பும், தொடையும் இணைந்தால் தான நாம் நிற்கவோ, நடக்கவோ, வளைந்து வேலை செய்யவோ, ஓடவோ முடியும். ஆண்டவரின் சிருஷ்டிப்பின் மேன்மைதான் இனென்று கூறுவது!

இணைப்புகள் சரியான விதத்தில் உருவாக்கப்பட்டிருந்தால் தான் இடுப்பின் பெலனைப் பெற்று வாழமுடியும். இதுபோன்றே ஆண்டவரோடு இணைந்திருந்தால்மட்டுமே சுவிசேஷத்தை அறிவிக்க நமக்குப் பெலன் கிடைக்கும். ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவனது வெற்றி அவனது இடுப்பின் பெலத்தைச் சார்ந்ததே. நாம் நமது பந்தயப்பொருளான அழிவில்லாத மகிமையின் கிரீடத்தைப் பரலோகத்திற்சென்று பெறும்படியாக ஓடவேண்டும் என்று, 1 கொரிந்தியர் 9:24 இல் வாசிக்கிறோம். மணவாட்டி மணவாளனுடைய பெலனை ஈவாகப் பெற்றிருந்தாள்.

ஆவிக்குரிய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒழுக்கத்துடனும் கிரமத்துடனும் ஓட, இடுப்பிலும், கால்களிலும் கிறிஸ்துவின் பெலன் தேவை. அவரது உன்னத பெலனைப் பெற்று வாழ, நாம் நம்மை அதிகமாகப் பயிற்றுவிக்கவேண்டும்.

"இடுப்பின் வடிவு ... பூஷணம் போலிருக்கிறது" (உன்.7:1).

'பூஷணம்' என்பது அணிகலனுக்கு—நகைக்கு—ஒப்பானது. இடுப்பு ஒரு நகையைப் போன்று அமையவேண்டுமானால் யாக்கோபு தேவனால் சந்திக்கப்பட்டதுபோல, நாமும் தேவனால் சந்திக்கப்படவேண்டும். ஒரு புருஷன் விடியற்காலம்வரை யாக்கோபோடு போராடினாரன்றோ? போராடினபின்பு அவனது தொடைச் சந்தைத் தொட்டாரென்று வேதம் கூறுகின்றது. அதுபோன்று, தேவன் நம்மையும் சந்தித்து, நமது தொடை நரம்பைத் தொடவேண்டும். அப்போது நமது மாமிச பெலன் அழியும்; தேவபெலனை நாம் பெறமுடியும். தேவனாலன்றி, நாம் ஒன்றுஞ் செய்ய இயலாது என்பதை இது உறுதிப்படுத்துகின்றது.

இவ்வநுபவத்தின் மேன்மையைச் சொற்களால் விவரிக்க முடியாது. ஆவிக்குரிய கிரியைகளைச் செய்ய இவ்விதமான உன்னத பெலன் வேண்டும். இது தேவனிடத்திலிருந்து நேரிடையாய்ப் பெற்றுக்கொள்ளும் உன்னத பெலனாகும்.

"விசித்திரத் தொழிற்காரரின் வேலை"

தமது பிள்ளைகளின் இடுப்பை வடிவமைக்கும் விசித்திரத் தொழிலாளர் தேவனே. அவர் நுண்ணிய சமர்த்தர்; தமது சித்தத்தை நமக்குள் உருவாக்கும் திறம் படைத்தவர். அவரைப்போல வேறொருவரையும் இவ்வுலகில் காணமுடியாது. மணவாட்டி, மணவாளனைச் சார்ந்து, தனது இடுப்பில்

பெலனைப் பெற்றுக்கொண்டதுபோல, நாமும் தேவனைச் சார்ந்து, அவரது உன்னதபெலனைப் பெற்று, ஆவிக்குரிய வாழ்க்கையில் அணிகலன் களாக விளங்குவோம்.

ராஜகுமாரத்தியின் சுவிசேஷம் அறிவிக்கும் பாதங்களையும் அவளது இடுப்பின் பெலனையும் கண்டு, எருசலேம் குமாரத்திகள் அவளைச் சூழ்ந்துகொண்டு இரசித்ததுபோல, ஆவியின் வளர்ச்சியில் குன்றியவர்கள் நம்மைச் சூழ்ந்து போற்றுமாறு, நாமும் தேவபெலனால் இடைக்கட்டப்படுவோம். (தொடரும்)

தொடர் பகுதி

கிழியுண்ட திரை

குல்ஷான் எஸ்தர்

எந்த ஒரு பதிலும் வரவில்லை. என் இதய வேதனையில் கதறியழுதேன். "நீர் என்னைச் சுகமாக்கக் கூடுமானால் என்னைச் சுகமாக்கும். இல்லாவிடில் காரணம் என்ன வென்று எனக்குச் சொல்லமாட்டீரா?"

இவ்வேதனையின் வழியில் என்னால் மேற்கொண்டு கொஞ்சமும் செல்லமுடியாது சோர்வுற்றேன்.

என்ன அற்புதம்! இது என்ன காட்சி! நான் வார்த்தைகளால் விவரிக்கமுடியாத ஓர் சம்பவம் நடைபெற ஆரம்பித்தது.

திடீரென எனது அறை முழுவதும் வெளிச்சத்தால் நிரம்பிற்று. முதலாவது எனது படுக்கை அருகில் உள்ள மேஜை விளக்கிலிருந்து அவ்வொளி வந்ததோ என்று யோசித்தேன். இல்லை. மேஜை விளக்கு மங்கலாகவே எரிந்துகொண்டிருந்தது.

ஒருவேளை பொழுது புலர்ந்துவிட்டதோ? இல்லை. பொழுது விடிய இன்னும் நேரம் இருந்தது.

அவ்வொளி மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. ஆஹா! பட்டப்பகலின் வெளிச்சத்திலும் அதிகமாக அவ்வொளி யிருந்தது. நான் பயந்து நடுங்கினேன். துப்பட்டியால் நான் என்னை இறுகப் போர்த்துக் கொண்டேன்.

ஒருவேளை இரவில் தோட்டத்தில் மாங்கனிகளைத் திருடர்கள் வந்து திருடா படியும், செடிகளுக்குத் தண்ணீர் சரியாகப் பாய்கிறதா என்று பார்க்கவும், தோட்டக்காரன் ஏற்றிய விளக்கின் ஒளியாக இருக்குமோ?

என் துப்பட்டியை மெதுவாக நீக்கி வெளியே பார்த்தேன். கதவுகள், ஜன்னல்கள் யாவும் மூடப்பட்டேயிருந்தன. மறைப்புத் திரைகளும் அடைப்புக் கதவுகளும் நன்றாக மூடிய நிலையிலேயே இருந்தன. இது என்ன அற்புதம்! நீண்ட அங்கிகளை அணிந்த உருவங்கள் அப்பேரொளியின் மத்தியில் என் கட்டிலுக்கு ஒரு சில அடி தூரத்தில் நிற்கிறதைக் கண்டேன். அவற்றின் மத்தியில் நின்ற பதின்மூன்றாவது உருவம் மற்ற உருவங்களைக் காட்டிலும் பெரியதாகவும் பிரகாசமானதாகவும் காணப்பட்டது. "ஓ தேவனே! இம்மக்கள் யார்? எல்லாக் கதவுகளும் ஜன்னல்களும் மூடப்பட்டிருக்க இவர்கள் எப்படி இவ்வறைக்குள் வந்தனர்?"

திடீரென, ஒரு குரல் பேசிற்று. " எழுந்திரு. இப்பாதையையன்றோ நீ இதுகாறும் வாஞ்சையோடு தேடினாய். நானே இயேசு மரியாளின் மகன். என்னை நோக்கியன்றோ நீ ஜெபித்தாய். இதோ, நானே உனக்கு முன்பாக நிற்கிறேன். நீ எழுந்து என்னண்டை வா."

நான் அழ ஆரம்பித்தேன். "ஓ இயேசுவே நான் முடமானவள். என்னால் எழும்ப முடியாது

என்று விம்மினேன். எனது படுக்கையில் பயந்து துவண்டு கிடந்த நான் தாமதித்ததால் அவர் இரண்டாம் முறையும், "நீ எழுந்து நில். என்னண்டை வா. நானே இயேசு" என்றார்.

நான் பயத்தாலும் சந்தேகத்தாலும் இன்னும் தாமதித்தேன். "எழுந்து நில்" என்று மூன்றாம் முறையும் அவர் அழைத்தார்.

பத்தொன்பது ஆண்டுகளாக, படுக்கையில் முடமாகக் கிடந்த குல்ஷான் ஃபாத்திமாவாகிய நான், புதியதொரு வல்லமை சூம்பிப்போன என் காலுக்குள்ளாகவும், கைக்குள்ளாகவும் பீறிட்டுப் பாய்கிறதை உணர்ந்தேன். என் பாதங்களைத் தரையில் வைத்தேன். எழுந்து நின்றேன். அதன்பின் ஒரு சில அடிகள் எடுத்துவைத்து ஓடிச்சென்று இயேசுவின் பாதங்களில் விழுந்தேன்.

பட்டப்பகலின் சூரிய வெளிச்சமும், முழு நிலவின் நல்லொளியும் இணைந்து பிரகாசித்த அப்பேரொளியின் இனிமையில் மனதார நீராடினேன். அவ்வொளி என் உள்ளத்திற்குள்ளும் மனதிற்குள்ளும் ஊடுருவிப் பாய்ந்தது. அக்கணத்தில் நான் அதுவரை அறிந்திராத அரும்பெரும் சத்தியங்களைத் தெளிவாய் அறிந்துகொள்ள ஆரம்பித்தேன்.

இயேசு தமது கரத்தை உயர்த்தி என் சிரசின்மேல் வைத்தார். அவரது கரத்திலுள்ள துவாரத்தில் இருந்து வெளிவந்த ஒளிக்கதிர் எனது பச்சை நிற ஆடைகளை வெண்மை யாய்த் தோன்றச்செய்தது.

"நானே இயேசு, நானே இம்மானுவேல்; நானே வழியும், சத்தியமும், ஜீவனுமா யிருக்கிறேன். நான் ஜீவிக்கிறேன், நான் மறுபடியும் வருகிறேன். பார், இன்றுமுதல் நீ எனக்குச் சாட்சியாக இருப்பாய். இப்பொழுது நீ உன் கண்களால் பார்த்தவைகளை நீ என் மக்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும். என் மக்களே உன் மக்கள். இவற்றை நீ என் மக்களிடத்திற்குக் கொண்டுசென்று அறிவிப்பதில் நீ நம்பகரமாய் இருப்பாயாக" என்று இயேசு அன்பாய்ப் பேசினார். (தொடரும்)

YOUTH SECTION

Transformed by trouble

"For our light and momentary troubles are achieving for us an eternal glory that far outweighs them all" (II Cor.4:17-NIV),

"It is the fire of suffering that brings forth the gold of godliness" - Madame Guyon.

God has a purpose for every problem. He uses circumstances to develop our character. In fact, it is through circumstances that He makes us like Jesus. Jesus Christ warned us that we would have problems in the world. No one is immune to pain and no one passes through life without problems. Every time you solve one problem, another is waiting to take its place. All are significant in God's growth process for you. I Peter 4:12 gives out, *"Don't be bewildered or surprised when you go through the fiery trials ahead, for this is no strange unusual thing that is going to happen to you."*

God uses problems to draw us closer to Himself. The Bible says, *"The Lord is close to the broken-hearted, and saves those who are crushed in spirit"* (Ps.34:18-NIV). When your heart is broken, because you are forsaken or when your pain is great,

you turn to God alone.

God could have kept Joseph out of jail; He could have kept Daniel out of the lion's den. But He did not do it. He let those incidents happen so that they could draw closer to the Lord. The following truths will help us to understand that troubles do a meritorious work of transformation.

1. Understanding Romans 8:28,29

We live in a fallen world. Only in heaven everything is done perfectly the way God intends. That is why we are told to pray, *"Thy will be done in earth as it is in heaven"* (Matt.6:10 KJV). To fully understand Romans 8:28,29 we must consider it phrase by phrase.

"We know"—Our hope in difficult time is not based on positive thinking or natural optimism. It is a certainty based on the truth namely that God is in complete control of the universe and that nothing happens without His knowledge. Our hope is based on the simple fact that God loves us.

"that God causes"—We have to fervently believe that the Grand Designer causes everything to happen in our lives. Your life is not a result of random chance or luck. There is a master plan. We make mistakes, but God never does.

"everything"—God's plan for your life includes all that happens to you—your mistakes, your sins and your hurts, illnesses, debts, disasters and the death of loved ones are not excluded. God can bring good out of the worst evil. Through Jesus' execution, He brought salvation to the whole world.

"to work together"—The events your life work together in God's plan to b a cake. You must use flour, eggs, salt, sug and oil. Eaten individually each is dista ful. But bake them together and they beco delicious. Give to God all your unpleas experiences and He will blend them toget for good.

"for the good"—In the official fa ily tree of Jesus Christ four women a listed—Tamar, Rahab, Ruth and Bathshe Tamar seduced her father-in-law to get a so Rahab was an harlot. Ruth was not Jewis but she broke the law by marrying a Jew man. Bathsheba committed adultery wi David. God brought good out of bad repu tion and Jesus came through their lineage

"of those who love God and a called"—This promise is only for God children. It is not for everyone. All thin work for bad for those living in oppositi to God and insist on having their own way

"accordwping to His purpose"— What is that purpose? It is that we becom like His Son. Everything God allows to hap pen in your life is to make you conform t the image of Jesus Christ.

II. Building Christ-like character

We are like jewels shaped with the hammer and chisel of adversity. If a jeweller's hammer is not strong enough to chip off rough edges, God will use a sledge hammer. Every problem affords an opportu nity to build character and the more difficu it is, the greater the potential for buildin spiritual muscles and moral fibre. Paul said *"We know that those troubles produ*

patience and patience produces character" (Rom.5:3,4). What happens outwardly in your life is not as important as what happens inside you. Your circumstances are temporary, but your character will last for ever.

The Bible compares our trials to a metal refiner's fire that burns away the impurities. Peter said, *"These troubles come to prove that your faith is pure. The purity of faith is worth more than gold"* (I Peter 1:7). A silversmith was asked, "How do you know when the silver is pure?" He replied, *"When I see my reflection in it."* When you have been refined by trials, people can see Jesus' reflection in you. James said, *"Under pressure your faith-life is forced open and shows its true colour"* (James 1:3 MSG). If we go through hard times with Him, then we will certainly go through good times with Him.

III. Refuse to give up

Be patient and persistent. The Bible says, *"Let the process go on until your endurance is fully developed and you will find that you have become men of mature character ... with no weak spots"* (James 1:3). Character building is a slow process. Whenever we try to avoid difficulties in life, we delay our growth and end up with a worse kind of pain. We escape the difficulties in life, and as a result, we decline character building. When you recognise the eternal consequences of your character building, you will not pray for comfort, but for conformation.

Whenever you face trouble, ask God, "What do You want me to learn?" Then, trust God and keep on doing what is right. Stay with God's plan to see the promised completion.

Do not give up - grow up.

Christmas சமாதானப் பிரபு சிறுவர் பகுதி

"தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" (லூக்கா 2:10,14).

என் அருமைப் பிள்ளைகளே! நமது இரட்சகராகப் பிறந்த இயேசு கிறிஸ்துவின் உன்னத நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

கிறிஸ்து பிறப்பின் பண்டிகையை உலகமே இன்று கொண்டாடுகின்றது. அந்நாட்களில், சமாதானப் பிரபு என்றழைக்கப்படும் இயேசு, சத்திரத்தில் இடமின்றி மாட்டுக்கொட்டகையில் வைக்கப்பட்டிருந்தார். அவர் இன்று உங்கள் உள்ளங்களில் பிறப்பரானால் என்னென்ன அதிசயங்கள் நடக்கும் என்பதை, இக்கதையை வாசித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

"தேவதூதன் எங்கே? தேவதூதன் எங்கே?" என்று பதட்டத்துடன் கேட்டார்கள் ஞாயிறு பள்ளி ஆசிரியை.

எப்பொழுதும் இந்தக் கேள்விக்கு, “இதோ இருக்கிறேன்,” என்று கூறி ஓடிவரும் தேவதூதனாக நடிக்கும் இம்மானுவேல் அன்று வரவில்லை.

அறைக்கு வெளியே அமர்ந்திருந்த அவன் கண்ணீருடன் காணப்பட்டான். அழுது அழுது அவன் கண்கள் சிவந்திருந்தன. அவனை அந்நிலைமையில் கண்ட அவன் ஞாயிறு பள்ளி ஆசிரியை அதிர்ச்சியுற்றார்கள். அவனருகே அமர்ந்து அவனை அணைத்துக்கொண்டு, “இம்மானு! என்ன இது? ஏன் அழுகிறாய்? தலை வலிக்கிறதா? அல்லது பசிக்கிறதா?” என்று கேள்விகளை அடுக்கினார்கள்.

ஐந்து வயது சிறுவனான இம்மானுவேல் ஞாயிறு பள்ளியில் படிக்கும் ஒரு சுட்டியான சிறுவன். கணீரென்று பேசக்கூடிய குரலையுடையவன். குழந்தையானாலும் பயமில்லாமல் நடிக்கும் ஆற்றலுடையவன். எப்பொழுதுமே சிரித்த முகத்தோடு இருக்கும் இம்மானுவேலைத் தேவதூதனாக நடிக்க வைத்தனர். ஆர்வத்தோடு வசனங்களை மனப்பாடம்பண்ணி நடித்து வந்த அவன், அன்று அழுதுகொண்டிருப்பதைக் கண்டு கவலையுற்றார்கள் ஞாயிறு பள்ளி ஆசிரியை.

“ஆன்டி! நான் தேவதூதனாக நடிக்கமாட்டேன். தேவதூதன் சொல்லும் சந்தோஷமும், சமாதானமும் என்னிடத்தில் இல்லை. எப்பொழுதும் என் அப்பாவும் அம்மாவும் சண்டைபோடுகிறார்கள்” என்று அழுதுகொண்டே சொன்னான் இம்மானுவேல்.

“எதற்காக இந்தப் பண்டிகையின் காலங்களில் உன் அப்பாவும், அம்மாவும் ஒருவரோடொருவர் சண்டைபோடுகிறார்கள்?” என்று ஆச்சரியத்தோடு கேட்டார்கள் ஆசிரியை.

“ஆன்டி, என் நண்பனுடைய வீட்டில், இயேசு அப்பா பொம்மை, மரியாள், யோசேப்பு, சாஸ்திரிகள், மேய்ப்பர்கள் போன்ற பொம்மைகளை மாட்டுக்கொட்டிலில் வடிவமைத்து வைத்திருக்கிறார்கள். இயேசு அப்பா அவர்கள் வீட்டில் பிறந்ததுபோல எங்கள் வீட்டிலும் பிறக்கவேண்டும் என்று நான் என் அம்மாவிடம் கூறினேன். அவர்களும் அதற்கு சம்மதித்தார்கள். ஆனால் என் அப்பாவோ கிறிஸ்துமஸ் மரம் வைத்து, வண்ண விளக்குகளை எரியவிடவேண்டும் என்கிறார். ஆகவே, இருவருக்குள்ளும் சண்டை மூண்டது. அந்தச் சண்டை இன்னமும் தீராததால், இயேசு அப்பாவும் என் வீட்டில் பிறக்கவில்லை. எனக்குப் புதுத்துணியும் இல்லை. அப்பாவும் அம்மாவும் கோபமாக இருப்பதால் என்னிடம் பேசுகிறதுமில்லை. ஆகவே, இந்தக் கிறிஸ்துமஸ் எனக்குப் பிடிக்கவில்லை” என்று தன் குழந்தைக்கேற்ற மழலைமொழியில் பேசினான்.

அவனை அணைத்துக்கொண்ட ஞாயிறு பள்ளி ஆசிரியை, “இயேசு அப்பா நிச்சயமாக உன் வீட்டில் பிறப்பார்” என்று ஆறுதல் கூறினார்கள். அன்று மாலை இம்மானுவேலின் வீட்டிற்குச் சென்ற ஞாயிறு பள்ளி ஆசிரியை, அவ்வீட்டின் அமைதியைக் கண்டு வியந்தார்கள். இம்மானுவேலின் பெற்றோர் தனித்தனியே ஒவ்வொரு மூலையில் அமர்ந்திருந்தனர். இம்மானுவும் அமைதியாக அமர்ந்திருந்தான். அவ்வீட்டில் ஒரு சோகம் கவ்வியிருந்தது.

அவர்களைக் கண்ட இம்மானுவேல், “அப்பா! அம்மா! ஆன்டி வந்திருக்காங்க” என்று கூறி, அவர்கள் கையைப்பிடித்து அழைத்துக் கொண்டுபோய் நாற்காலியில் அமரச்செய்தான்.

அப்பொழுது அன்று காலை பள்ளியில் நடந்த சம்பவத்தை ஞாயிறு பள்ளி ஆசிரியை விவரித்தார்கள். அவர்களுடைய சண்டை அவர்களுடைய மகனின் மனநிலையை எவ்வளவாகப் பாதித்திருந்தது என்பதைத் தெளிவுபடுத்தினார்கள். அநேக வேதவசனங்களை ஆதாரமாகக்கொண்டு, கிறிஸ்து அவர்கள் உள்ளங்களில் பிறவாவிட்டால் புறம்பான

லங்கரிப்புகளும், வெளிப்படையான ம்பரங்களும் வீண் என்பதை ஆணித்தரமாக த்துரைத்தார்கள். இம்மானுவேலின் ற்றோர் வெட்கி, தலைகுனிந்தனர். யானவர் கிரியை செய்யத் தொடங்கினார். கள் குற்றத்தை உணர்ந்து தேவனிடம் ிக்கையிட்டு, ஒருவரோடு ஒருவர் புரவாயினர்.

உடனே இம்மானுவேல், "அப்பா! மா! வாங்க, கடைக்குப் போய் மாட்டுக் ாட்டிலின் பொம்மைகள் எல்லாம் வாங்கி டில் வைக்கலாம்" என்று மகிழ்ச்சியோடு த்தான்.

"இம்மானு! கடையிலிருந்து வாங்கி ும் பொம்மைகள் மூலமாகவோ, மாட்டுக் ாட்டிலைப்போல வடிவமைப்பதின் மாகவோ இயேசு அப்பாவை உன் வீட்டில் க்கவைக்க இயலாது. நீ அவரிடம் உன் ளத்தில் வரும்படி கேட்டால், அவர் வந்து உள்ளத்தில் பிறப்பார். இந்த பொம்மைகள், ிஸ்துமஸ் மரம், அலங்காரங்கள், வண்ண க்குகள் போன்றவை கொடுக்கும் சந்தோஷம் காலிகமானது. ஆனால், இயேசு அப்பா ாடுக்கும் சந்தோஷமோ நிரந்தரமானது. தச் சந்தோஷம் உங்கள் வீட்டில் திருப்பதால், தேவதூதன் என்ன சொல்ல ண்டும்?" என்று அந்த ஆன்டி கூற, கணீரென்ற லில், "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை களுக்கு அறிவிக்கிறேன்" என்று தொடங்கி, க்கா இரண்டாம் அதிகாரத்தின் பத்திலிருந்து ினான்கு வரையுள்ள வசனங்களைக் றினான் இம்மானுவேல்.

அனைவரும் மகிழ்ந்தனர்; சமாதானத் ால் நிரப்பப்பட்டனர். சமாதானப் பிரபுவாகிய யேசு கிறிஸ்து இம்மானுவேலின் குடும்பத்தில் ியதொரு மாற்றத்தைக் கட்டளையிட்டார்.

என் அருமைப் பிள்ளைகளே! கிறிஸ்துமஸ் பண்டிகையை வெளிப்படையாகக் கொண்டாடுவதன்மூலம் கிடைக்கும் சந்தோஷம் தற்காலிகமானது. ஆனால் கிறிஸ்து உங்கள் இருதயங்களில் பிறப்பாரானால் உங்கள் குடும்பங்களில் சமாதானமும் சந்தோஷமும் நிரந்தரமாகக் காணப்படும். சமாதானப் பிரபுவாகிய இயேசு கிறிஸ்து உங்கள் உள்ளங்களில் பிறக்கவேண்டுமா? நீங்கள் நிரந்தரமான சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டுமா? என்னோடு இணைந்து ஜெபிப்பீர்களா?

"அன்புள்ள இயேசு அப்பா! நான் பாவி. என்னை மன்னித்து, உம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்ளும். சமாதானப் பிரபுவாகிய நீர் இன்று என்னுள்ளத்தில் பிறந்து என் சந்தோஷத்தை நிறைவாக்கும், ஆமென்."

ஆம், இப்போது நீங்கள் ஏறெடுத்த ஜெபத்தினால் சமாதானப் பிரபுவாகிய இயேசு உங்களுள்ளத்தில் பிறந்துவிட்டார். இதுவே, கிறிஸ்துமசின் மகிழ்ச்சியாகும்.

A TRIBUTE

Glory to God

Bro. A. Ramalingam who has gone to be with the Lord was the Chairman of the A.C.A. Literature Ministry Trust. His death has left a void which none other than the Lord can fill.

He was far-sighted, and planned everything well in advance. He had administrative abilities and management skills. Whatever he touched, he refined.

In the activities of the Literature Ministry I found him an organizer of extraordinary versatality. There was nothing he could not do, and whatever he chose to do, he accomplished in a way few could.

He was an untiring and systematic worker. He was always ready to help any one who needed help. No one who approached him for help was turned away without being helped. Many a time I personally received

(Continued on page no.23)

அப்போஸ்தல கிறிஸ்தவ சபை, ஆலய வளாக நிர்வாகியாகப் பணியாற்றி, தேவ இராஜ்ஜியத்திற்குக் கடந்துசென்ற

திரு. அ. இராமலிங்கம்

அவர்களைக் குறித்த சாட்சி

பக்தி வைராக்கியம் மிகுந்த சைவ குலத்தைச் சார்ந்த திரு. அருணாச்சலம், தங்கப் பாப்பு தம்பதியருக்கு நான்காவது மகனான திரு. இராமலிங்கம் அவர்கள் தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுக்காவிலுள்ள நெல்லிக்கொல்லை என்கின்ற சிறிய கிராமத்தில் பிறந்தார்.

பாரம்பரிய சைவ குடும்பப் பின்னணியில் வளர்க்கப்பட்ட இவர், சைவ இலக்கியம் பயிலுவதற்கென தருமபுரம் ஆதீனத்திற்கு அனுப்பப்பட்டார். இவ்வாறு நான்காண்டுகள் பயின்று, தமிழ் இலக்கிய பட்டப் படிப்பை முடித்து, தமது 19வது வயதிலேயே தமிழ்ப் புலவர் ஆனார்.

1954 ஆம் ஆண்டு இவர் சென்னைக்கு வந்து, இராயப்பேட்டையிலுள்ள பள்ளி ஒன்றில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். அங்கு, அவருடன் பணியாற்றிவந்த சாவித்திரி என்ற சகோதரிமூலம் அவரது சகோதரரான எம்.கே. சாம் சுந்தரம் அவர்களிடம் அறிமுகம் செய்யப்பட்டு, இரட்சிப்புக்குள் வழிநடத்தப் பட்டு, 1957ஆம் ஆண்டு அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில் கிறிஸ்துமஸ் நாளன்று ஞானஸ்நானம் பெற்றார். 1958, ஜனவரி 13 ஆம் நாள் போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்களின் மூன்றாம் மூத்த சகோதரியான சகுந்தலா அவர்களை விவாகம் செய்து கொண்டார்.

மிகவும் கண்டிப்புடன் செயல்பட்டாலும், மிகுந்த மனதுருக்கத்துடன் விளங்கிய அவர், பாஸ்டர் ஜி. சுந்தரம் அவர்கள் ஏ.சி.ஏ. சபையை நிறுவிய காலத்திலிருந்து காணப்பட்ட மூத்த விசுவாசிகளுள் ஒருவராவார்.

இவர்களுக்குச் சாமுவேல் என்கின்ற மகனும் (தற்போது தனது மனைவி ஜரீன், மகன் எட்வின் உடன் நியூஸிலாந்தில் வசித்து வருகிறார்), கிரேஸ் என்கிற மகளும் (தனது கணவர் சாமுவேல் செல்லையயா, அமெரிக்காவில் படிக்கும் மகன்கள் சிமியோன், நவீன், எபனேசர் காட்வினுடன் துபாயில் வசித்து வருகிறார்) பிறந்தனர். திரு. இராமலிங்கம் அவர்கள் தனது பணியில் கண்டிப்பு மிக்கவராகவும், பிள்ளைகளுக்கு அன்புமிக்க தந்தையாகவும் வாழ்ந்துவந்தார்.

சென்னை மாநாகராட்சி பள்ளிகளில் அனுபவம் மிகுந்த தமிழாசிரியராக விளங்கிய இவர் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றதுமன்றி, கடின உழைப்பினிமித்தம் மாநகராட்சியில் கடைசியாகப் பணியாற்றிய பள்ளியில் அனைத்துப் பிள்ளைகளும் தங்களது இறுதித் தேர்வில் நூறு சதவீதம் வெற்றி பெறுமாறு செய்து, புகழோடு ஓய்வுபெற்றார். பின்னர், ஓர் அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசியாக கே.கே. நகரில் உள்ள அப்போஸ்தல கிறிஸ்தவ சபைக்கு ஒரு தூண்போலச் செயல்பட்டார்.

2003 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் முதல் அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையின் இலக்கிய ஊழியத்தின் தலைவராகப் பொறுப்பேற்று, அதன் மாதவிதழான, "விடுதலைத் தூதன்" பத்திரிகையை வெளியிடுவதற்காக, ஞாயிறுதோறும் தலைமைச் சபைக்குச் சென்று சிறப்பாகப் பணியாற்றிவந்தார். மேலும், போதகர் சாம் சுந்தரம் அவர்களது செய்திகளைத் தொகுத்துப் புத்தகங்களாகவும், எம்.பி.3 சி.டி.க்களாகவும் வெளியிடுவதில், அவரது மனைவியாரான சகுந்தலாவுடன் இணைந்தும் செயல்பட்டார்.

மட்டுமன்றி, அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைப் போதகர் சாம் சுந்தரம் அவர்களுக்கு உறுதுணையாயிருந்து, ஆலய வளாக

ர்வாகத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்று நடத்திவந்தார்.

இவர் தன்னுடைய தாலந்துகள் மற்றும் அனுபவங்களை, தேவனுடைய நாம மகிமைக்கென்றும், தேவ இராஜ்ஜிய விரிவாக்கத்திற்கென்றும் பயன்படுத்தினார்.

இவர் 2010, அக்டோபர் 26 ஆம் நாள் விடியற்காலை சுமார் 4.30 மணிக்கு, தனது நித்திரையின்போது, எவ்வித அல்லலுக்கும் உட்படாது, கர்த்தரோடிருக்கச் சென்றுவிட்டார். அவரது மரணச் செய்தி, உற்றாருக்கும், உறவினருக்கும், சபையாருக்கும் ஓர் அதிர்ச்சி தரும் செய்தியாகவே இருந்தது.

அன்னாரது அரும் பண்புகளாவன :

1. *"செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ அதை உன் பெலத்தோடே செய்"* (பிரசங்கி 9:10) என்ற வாக்கிற்கிணங்க, அவர் ஆலயத்திற்கு ஆற்றின தொண்டுகளை முழுபெலத்தோடும் முழுமனதோடும் செய்தார்.

2. அவரது வாய்மொழிகள், *"உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்"* (மத்தேயு 5:37) என்ற வசனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்திருந்தன.

3. *"அவனவன் தனக்கானவைகளை அல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக"* (பிலிப்பியர் 2:4) என்ற வேத வசனத்திற்கு ஒப்பாக, அவர் பிறருக்கு நன்மை செய்வதில் மிகுந்த நாட்டங்கொண்டவராய் விளங்கினார்.

4. *"அசதியாயிராமல் ஜாக்கிரதையாய் இருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்"* (ரோமர் 12:11) என்னும் வசனத்திற்கிணங்க, அவர் தனது கடைசிமூச்சுவரை, கர்த்தருக்கு ஊழியஞ் செய்ய அசதியாயிருந்ததில்லை.

5. ஆசரிப்புக்கூடாரத்தைவிட்டு நீங்காது வேலைசெய்த யோசுவாவைப்போல, அவர் இரவும் பகலும் ஆலய வளாகத்தைச் சுற்றிச் சுற்றிவந்து, அதற்கு ஒரு மதில்போல் நின்று, தனது இறுதிநாள்வரை ஊழியஞ்செய்தார்.

வாழ்வின் எதிர்மறையான எல்லாக் காரியங்களையும் அவர் ஓர் அறைகூவலாக ஏற்று, தேவனுக்காகத் தொண்டாற்றின அன்னாரது கொள்கைகளை நாமும் ஏற்று, தேவனுக்கு ஊழியஞ்செய்வோமாக.

இயேசு அவரை நோக்கி, *"நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, ... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி..."* (மத்தேயு 25 : 23) என்பார் என்பது திண்ணம்.

அவரது குடும்ப அங்கத்தினரின் ஆறுதலுக்காக விசுவாசிகள் நாம் ஜெபிப்போமாக.

(Continued from page no.21)

help from him.

He was very careful in using the Literature Ministry Funds, and I could see that all his financial dealings were above board.

He was a strict disciplinarian as most school masters of old were. Yet, there were moments when the human side of love in him came to the fore. Very few would have noticed it.

In his death both the Literature Ministry and the church have lost an excellent administrator, and it is highly doubtful if any one as efficient as he was could fill the vacancy and meet the challenge.

May the God of all comfort (II Cor.1:3) console and comfort the bereaved family.

-Pauline George
Secretary
A.C.A.L.M. Trust

சபையின் செய்திகள்

2010, நவம்பர் திங்கள் 8 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபை ஊழியர்களும், இச்சபையோடு ஐக்கியங்கொண்ட ஏனைய சபைகளின் ஊழியர்களும் ஒருங்கிணைந்து, தலைமைச் சபை வளாகத்தில் கூடினர்.

போதகர் தாமஸ் ராஜ் அவர்கள், துதி ஆராதனையைப் பொறுப்பேற்று நடத்தினார். போதகர் ரூபன் தீமோத்தேயு (தென் ஆப்பிரிக்கா) அவர்கள், ஆதியாகமம் 1:26 ஐ மையமாகக் கொண்டு, "ஊழியர்களின் தலைமைத்துவம்" என்ற தலைப்பில் சிறப்புச் செய்தி வழங்கினார்.

ஊழியர்கள் தலைமைத்துவத்தின் நோக்கத்தை அறியவேண்டும்; தலைமைத் துவத்தில் பணியாற்றும் ஊழியர் உண்மை யுள்ள ஊழியர்களை எழுப்பவேண்டும்; ஜெப குழுக்களின் வாயிலாக முறைப்படுத்தி ஏற்படுத்தவேண்டும்; ஊழியர் எஜமானைப் போன்று செயல்படாது, தலைவரைப்போன்று தைரியமாய்ச் செயல்படவேண்டும் என்று அழகுற போதித்தார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்பு, போதகரின் ஆசீர்வாத ஜெபத்தோடு மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் இனிய முறையில் கலைந்தது.

அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் 2011 ஆம் ஆண்டுக்கான வாக்குத்தத்த வசன காலண்டர்கள், மற்றும் நாட்குறிப்புகள் (Diaries) புத்தகசாலையில் விற்பனைக்கு உள்ளன.

NEWS

உறுதி

மூன்று நாள் பயணமாக இந்தியா வந்த அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, பார்லிமென்ட் கூட்டுக் கூட்டத்தில் எம்.பி.க்கள் மத்தியில் 35 நிமிடம் உரை நிகழ்த்தினார். அப்போது அவர் கூறியதாவது: "வரக்கூடிய ஆண்டுகளில் ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் மாற்றி அமைக்கப்படும் என எதிர்பார்க்கிறேன். அப்படி மாற்றப்படும் போது, இந்தியா அதில் நிரந்தர உறுப்பினராக இடம்பெறும். இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான பேச்சு வார்த்தைகள் தொடர்வதை அமெரிக்கா வரவேற்கும். அந்த இரு நாடுகளும் பேச்சு வார்த்தைகள் மூலமாகவே தங்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். மும்பை தாக்குதலுக்குக் காரணமான சதிகாரர்கள், நீதியின்முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும்.

"இந்தியா ஒரு சக்தி வாய்ந்த நாடாக உருவாகிக்கொண்டிருப்பதை அமெரிக்கா வரவேற்கிறது. இந்தியாவுக்கு எப்போதும் தோளோடு தோள் நின்று அமெரிக்கா உதவிசெய்யும். பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர இடம் பெற இந்தியாவும் தயாராகி வருவதை நாங்கள் வரவேற்கிறோம்.

"இன்றைய நாளில் உள்ள நாகரிக சமுதாயம் உருவாக, இந்திய தலைவர்கள் பலர் சிறப்பான பங்காற்றியுள்ளனர். மகாத்மா காந்தி மற்றும் அவரின் செய்திகள், அமெரிக்கர் களுக்குப் பெரிய அளவில் ஊக்கமளித்துள்ளன.

"அப்படியில்லையெனில், அமெரிக்க அதிபராக இன்று நான் உங்கள்முன் நிற்க முடியாது. காந்தியின் வாழ்க்கைமூலம் பெற்ற தூண்டுதலே என்னை இந்த அளவுக்கு உயர்த்தியுள்ளது" என்று கூறினார்.

(தினமலர் 9-11-2010)

ஒரு ஆசிரியரின் ஜெபம்

நான் ஒவ்வொரு நேரமும்
என் வகுப்பைச் சந்திக்குமுன்,
சற்றுத் தயங்கி, பிதாவை நோக்கி,
''கர்த்தாவே! நான் ஒவ்வொரு பிள்ளையையும்
புரிந்துகொள்ள உதவும்''
என வேண்டுகிறேன்.

''ஒவ்வொரு மாணவனிலும் விலையேறப்பெற்ற,
மிகவும் அருமையான ஆன்மாவை நான் காணவும்,
அப்பிள்ளையைப் பயமுள்ள பாதைகளிலன்றி
ஆச்சரியமான வழியில் நடத்தவும்
உதவியருளும்.

''அன்புத் தந்தையே! அவர்கள் என்னிடம்
உண்மையான கிறித்தவ வழிநடத்துதலை எதிர்பார்க்கும்போது,
எனக்கும் நீர் போதித்தருளும் என்று
உம்மிடம் பணிவுடன் வேண்டுகின்றேன்.'' ஆமென்.

- நெல்லி பீஸ் கோர்பெட்

ACALM

விடுதலைத் தூதன் வாசகர்கள்
அனைவருக்கும்
எங்களது இதயங்கனிந்த
கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்

We wish you a
Merry Christmas

Reg.Number TN/CCN/385/09-11. Licence to the post under WPP No.TN.CCN.85/09-11
Regd.Under Regis.of News paper for India No. 1295/57. Posting date 29th & 30th of every month
Date of Publication: monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai - 600 008.

Book - Rs.5/-

1. உங்கள்மீதுள்ள அபிஷேகம்
2. விசுவாசிகளின் சாட்சி
3. சாட்சிகள் 60
4. உத்தம சாட்சிகள்
5. இயேசுவின் அன்பு (சாட்சிகள்)
6. எஸ்தர்
7. இயேசு கிறிஸ்து மாறாதவர்
8. ஒளி வீசும் சாட்சிகள்
9. முரண்பாடுகள்
10. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
11. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
12. Jesus met me in jail
13. எனது அநுபவங்கள்
14. My experiences

Book - Rs.10/-

15. அநாதி கிருபை
16. கர்வாலி மரம்
17. பக்திவிருத்தி உண்டாக்கும் சாட்சிகள்
18. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
19. நீதிமான்கள்
20. கிறிஸ்துமஸ் செய்திகள்
21. இயேசு உயிர்த்தெழுந்தார்
22. நீதியின் சூரியன்
23. பரதேசிகளாகிய நாம்
24. கிறிஸ்தவ குடும்பம்
25. நித்திய பிரதான ஆசாரியர்
26. சபை சபைதானா?
27. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
28. புத்தாண்டு தேவ செய்திகள்
29. விழித்திரு
30. சிலுவைக்கு அப்பால்
31. வணக்கம்
32. இனிமேல்
33. இரட்சிப்பின் சாட்சிகள்
34. ஜீவனுள்ள சாட்சிகள்
35. அற்புத சாட்சிகள்
36. சாட்சிகள்
37. எரி நரகத்திற்கு தப்பினேன்
38. மாபெரும் மாற்றம்
39. நன்றியுள்ள சாட்சிகள்
40. கல்லூரியில் அற்புதங்கள்
41. நற்செய்தி கதைகள்
42. தீப ஒளி
43. வழிகாட்டும் கதைகள்
44. அந்தக் கடிதங்கள்
45. அந்த மயில்கள்
46. கனமான ஊழியம்
47. வெளிச்சம்
48. ஆத்தும நேசர்
49. மேகம்
50. ஐக்கியம்
51. கொடி
52. இன்னும் சந்தேகமா?
53. கர்த்தருடைய பிள்ளைகள் அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
54. இயேசுவே மெய்யான ஒளி
55. மேய்ப்பரின் கடிதங்கள்
56. ஆபிரகாமின் தேவன்
57. இரட்சிப்பின் படிகள்
58. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
59. ஒருவருக்கொருவர்
60. பேசும் தெய்வம்
61. மருத்துவமனையில் அற்புதங்கள்
62. முதலாம் ஆதாம்
63. ஆசீர்வாதங்களின் திறவுகோல்
64. நீரே என் மேய்ப்பர்
65. தேவ ஊழியம்
66. உத்தம ஊழியம்
67. Eternal Grace
68. The Star
69. The New Year
70. Spiritual Questions
71. The Timely Warning
72. The Blessing
73. Your response to the Cross
74. The power of Prayer
75. Springs in the valley
76. A Narrow Escape from Hell

Book - Rs.15/-

77. ஏழு வார்த்தைகள்
78. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
79. இயேசு கூறின உவமைகள்
80. அதிசயமான தேவ கிருபை
81. Amazing Grace of God
82. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-4

Book - Rs.20/-

83. என் நேசரின் சத்தம்
84. தேவனுடைய வாக்குத்தத்த செய்திகள்
85. வாக்குத்தத்தச் செய்திகள் 200
86. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-1
87. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-2
88. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
89. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
90. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள்-1
91. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள்-2
92. ஒருவருக்கொருவர்
93. Successful Ministers of the
94. Messages of God's blessing Part
95. Messages of God's blessing Par

Book - Rs.25/-

96. A Good Soldier of Jesus Ch
97. வாக்குத்தத்தச் செய்திகள் 200
98. வாக்குத்தத்தச் செய்திகள் 200
99. வாக்குத்தத்தச் செய்திகள் 200
100. வாக்குத்தத்தச் செய்திகள் 20
101. வாக்குத்தத்தச் செய்திகள் 2
102. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 3
103. தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள்
104. ஜெபத்தின் வல்லமை

Book-Rs.30/-

105. நல்ல போர்ச்சேவகன்
106. ஆவிக்குரிய தேவசெய்தி

Book-Rs.100

107. உன்னதப்பாட்டு

(போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அ 1997 ஆம் ஆண்டு வேத பா போதித்து வந்த உன்னதப் புத்தகத்தின் தொகுப்பு)

வேண்டுவோர் விரும்பும் நூல்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

24 Hrs. Prayer Line
26625815

Herald of Deliverance

Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622775 Website: www.acaprayerhouse.org
Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 26622021 e-mail: acalm@acaprayerhouse.org
Printed by: Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street,
Vadapalani, Chennai -600 026. Phone: 24728665/Cell